தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000 SPECIAL OFFER
ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B,மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004

சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
PRGI NO: TNTAM/25/A1018

SN ஆட்டோ கன்சல்டிங்
டூவீலர் விற்க வாங்க...
பைனான்ஸ் வசதி உண்டு
317, ராஜபாளையம் ரோடு, SBI வடபுறம், சங்கரன்கோவில்
G.சுதாகர் - 99656 02104

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 232 14.2.2026 SATURDAY MAASI : 2 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 232 14.2.2026 சனிக்கிழமை மாசி : 2 விலை : ரூ.5/-

## தலைவர்கள் சொல்வது என்ன?

# “மகளிருக்கு ரூ.5 ஆயிரம்!”



## தலைமையாசிரியை மீது மாணவிகள் சரமாரி புகார்: ஐ.பெரியசாமி அமைச்சரிடம் மனு

### கூடுதல் பேருந்து வசதிக்கு உறுதி

சின்னாளபட்டி, பிப்.14

திண்டுக்கல் மாவட்டம் வீ.கூத்தம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவிகள், தங்கள் பள்ளி தலைமையாசிரியை மீது ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் அதிரடியாகப் புகார் மனு அளித்தனர்.

மாணவிகளின் புகார்கள்:

வீ.கூத்தம்பட்டிக்கு வருகை தந்த அமைச்சரைச் சந்தித்த 50க்கும் மேற்பட்ட மாணவிகள், தலைமையாசிரியை சத்யா தங்களை தினசரி பள்ளி கழிவறைகளை சுத்தம் செய்யச் சொல்வதாகவும், தலையில் பூ வைத்து வந்தால் ஆபாசமாகத் திட்டுவதாகவும் கூறி கண்ணீர் மல்க மனு அளித்தனர். புகாரைக் கேட்ட அமைச்சர், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்து மாணவிகளைத் தேற்றினார்.

புதிய பேருந்து வசதி:

தொடர்ந்து, ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்ற அமைச்சர், திண்டுக்கல் மற்றும் செம்பட்டியிலிருந்து பள்ளி நேரங்களுக்கு ஏற்ப கூடுதல் பேருந்து வசதிகள் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும் என உறுதி அளித்தார்.

மகளிர் உரிமைத் தொகை ரூ.5000 அறிவிப்பு:

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, "தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிர் உரிமைத் தொகை பெறுபவர்களுக்கு இந்த மாதம் ரூ. 5,000 வழங்கி இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ளார். காலையிலிருந்து ஏராளமான பெண்கள் முதல்வருக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர். ஒரு சகோதரனாக மகளிரின் குடும்பச் சூழ்நிலையை உணர்ந்து முதல்வர் இந்த நிதியை வாரி வழங்கியுள்ளார்" என்றார்.

இந்நிகழ்வில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், ராஜேந்திரன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் கட்டம் நிறைவு

### இரு அவைகளும் மார்ச் 9க்கு ஒத்திவைப்பு

புதுடெல்லி: பிப்.14-

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் கடந்த ஜனவரி 28ம் தேதி, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவின் உரையுடன் தொடங்கியது. ஓய்வுபெற்ற ராணுவத் தளபதி நரவனேவின் வெளியிடப்படாத நினைவுக் குறிப்பு புத்தகத்தில், இந்தியா சீனா இடையேயான கல்வாண் மோதல் தொடர்பாக தெரிவிக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படும் ஒரு விஷயத்தை மக்களவையில் ராகுல் காந்தி எழுப்ப முயன்றார். இதற்கு சபாநாயகர் அனுமதி மறுத்ததை அடுத்து, எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

பிப்ரவரி 2ம் தேதி முதல் தினமும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. தொடர்ந்து இந்தியா அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் குறித்து நாடாளுமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, அமெரிக்காவின் அழுத்தத்துக்கு இந்தியா பணிந்து விட்டதாகவும், பாரத மாதாவை விற்று விட்டதாகவும் குற்றம் சாட்டினார். இந்த விவகாரமும் நாடாளுமன்றத்தில் சலசலப்பை ஏற்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக, எப்ஸ்டீன் கோப்புகளில் மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியின் பெயர் இடம் பெற்றிருப்பதாகக் கூறி அவர் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் மக்களவை தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கு பிரதமர் மோடி பதில் அளிப்பதாக இருந்தது. ஆனால், அவர் அவைக்கு வந்தால் விரும்பத்தகாத நிகழ்வை அரங்கேற்ற எதிர்க்கட்சி எம்பிக்கள் திட்டமிட்டிருந்ததாகக் கூறிய சபாநாயகர் ஓம் பிர்லா, பிரதமரை அவைக்கு வர வேண்டாம் என கேட்டுக்கொண்டார். எனினும், மாநிலங்களவையில் பிரதமர் மோடி தனது உரையை நிகழ்த்தினார்.

பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், பல மணி நேரங்கள் வீணடிக்கப்பட்டன. இன்றும் இந்த விவகாரங்களை எதிர்க்கட்சிகள் எழுப்பின. இதன் காரணமாக மக்களவை முதலில் பகல் 12 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது. பின்னர், மார்ச் 9ம் தேதி வரை ஒத்திவைக்கப்பட்டது. இதேபோல், மாநிலங்களவையை மார்ச் 9 வரை ஒத்திவைப்பதாக அதன் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அறிவித்தார்.

ஏற்கெனவே திட்டமிட்டபடி மூன்று வார கால இடைவெளிக்குப் பிறகு நாடாளுமன்றம் மீண்டும் கூட உள்ளது. பட்ஜெட்டில் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு அமைச்சகங்களுக்கான ஒதுக்கீடுகளை நிலைக்குழுக்கள் ஆய்வு செய்வதற்காக இந்த கால இடைவெளி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை: பிப்.14-

சட்டசபை தேர்தலை முன்னிட்டு கோடை சிறப்பு தொகுப்பு ரூ.2 ஆயிரம் உட்பட ரூ.5 ஆயிரம் இன்று (பிப்ரவரி 13) மகளிர் உரிமைத்தொகை பயனாளிகளுக்கு வங்கியில் வரவு வைக்கப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக தலைவர்கள் கருத்துகள் தெரிவித்துள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு;

அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ்

அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: தேர்தல் தோல்வி பயம்,முதல்வரை என்னவெல்லாம் செய்ய வைக்கிறது. 28 மாதங்களாக '1000 ரூபாய்' கொடுக்காமல் இழுத்து அடித்த ஸ்டாலின் அரசு, தற்போது மூன்று மாதத் தொகையோடு சேர்த்து 'கோடைக்கால சிறப்புத் தொகை' கொடுக்கிறாராம்.

2024, 2025 ஆண்டுகளில் நமக்கு கோடைக்காலமே வரவில்லையா? சிறுமி முதல் மூதாட்டி வரை எந்தவொரு பெண்ணுக்கும் பாதுகாப்பு இல்லாத மாநிலமாக தமிழகத்தை சீர்குலைத்துவிட்டு, இப்போது 'தேர்தல் நேரத்து பணம்' வரவு வைக்கும் இந்த பேட்ச்ஒர்க் வேலையை தமிழக பெண்கள் நம்பி விடுவார்களா என்ன?

செப் 2023 முதல் இதுவரை உங்கள் அரசு கொடுத்த தொகை ரூ. 34,000! ஆனால், உங்கள் ஆட்சியால் ஒவ்வொரு குடும்பமும் இழந்த குறைந்தபட்சத் தொகையே 'ரூ.3,50,000'! இதை வீடு வீடாக சென்று அதிமுக அம்பலப் படுத்தி வருவதைக் கண்ட பயத்தில் வருவது தானே இந்த அறிவிப்பு?

இப்போது 'மாதம் 2000 ரூபாய்' என்று நான் அளித்த அதிமுக தேர்தல் வாக்குறுதியைக் கண்டதும், வரும் 2026 சட்டசபை தேர்தல் பயத்தில், இந்த அறிவிப்பு வெளியில் வருகிறது.யாரும், எந்தவொரு திட்டத்தையும் தடுக்காத போதிலும், நீங்களாக வந்து 'ஐயையோ முடக்கப் பார்க்கிறார்கள்' என்று சொல்வதைப் பார்த்ததால் வேடிக்கையாக இருக்கிறது. 'அனைத்து குடும்ப அட்டைக்கும்' என்று வாய்கிழிய அளித்த வாக்குறுதியை 5 ஆண்டுகளாக நிறைவேற்றாமல், தகுதியானவர்களுக்கு மட்டும் என சொல்லி ,1 கோடி தமிழ்ப் பெண்களை நிராகரித்துள்ளீர்கள்.

இன்னும் மூன்று மாதங்களுக்குள் அமையவுள்ள அதிமுக ஆட்சியில், தமிழகப் பெண்களுக்கு 'குல விளக்குத் திட்டம்' மூலம் அனைத்து குடும்பத் தலைவிக்கும் 'மாதம் ரூ.2000' என்று நான் அளித்த வாக்குறுதியானது, அதிமுக ஆட்சி அமைந்தவுடன் அமல்படுத்தப்படும். இவ்வாறு இபிஎஸ் கூறியுள்ளார்.





மோசடி திமுகவின் வலையில் தமிழக மகளிர் சிக்க மாட்டார்கள்!

தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன்:

2021இல் ஆட்சி அரியணை ஏறியதிலிருந்து 2024 லோக்சபா தேர்தல் வரை 28 மாதங்கள் மகளிர் உரிமைத் தொகை வழங்காமல் ஏமாற்றிய திமுக அரசு, வலையை விரித்து இரையைப் பிடிப்பது போல, இப்பொழுது ரூ.5,000 பணத்தைக் கொடுத்து, தங்கள் அவல ஆட்சியின் சுவடுகளை மறைத்துவிடலாம் எனத் தப்புக்கணக்கு போடுகின்றது.

ஆட்சி தொடங்கியதிலிருந்து பொங்கலும் கோடை காலமும் எத்தனையோ முறை வந்திருக்கிறது. ஆனால், தேர்தல் நேரத்தில் மட்டும் தான் பொங்கலும், கோடை காலமும் திமுகவின் கண்களுக்குத் தெரியுமா? உண்மையில் பொங்கலுக்கான ரூ.3,000மும், கோடைகாலத் தொகை ரூ.2,000மும் மக்கள் நலனுக்காகக் கொடுக்கப்பட்ட தொகை அல்ல, தேர்தல் தோல்வி அச்சத்தில் கொடுக்கப்பட்ட அச்சாரத் தொகையே!

2021இல் இருந்து 2023 வரையிலான ₹28,000 மகளிர் உரிமைத் தொகையை வழங்காமல் ஏமாற்றிவிட்டு, 2024 பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு சிலருக்கு மட்டும் உரிமைத் தொகையை வழங்கிய திமுக, ஒருவேளை, தப்பித்தவறி துரதிஷ்டவசமாக 2026 தேர்தலில் வென்றால், உடனே 2026இல் மகளிர் உரிமைத் தொகையை வழங்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

சொல்லப் போனால், திமுகவின் திட்டமே, தற்போது ரூ.5,000 வழங்கி அதையும் இதையும் செய்து குட்டிக்கரணம் அடித்து சட்டமன்றத் தேர்தலில் ஜெயித்துவிட்டால், முன்பு செய்தது போல, 3 ஆண்டுகள் வரை உரிமைத் தொகையைக் கொடுக்காமல் ஏமாற்றி விட்டு, 2029 லோக்சபா தேர்தல் நெருங்கியதும் மீண்டும் பணத்தைக் கொடுத்து, மக்களை ஏமாற்றலாம் என்பது தான்!

விடுதலை சிறுத்தைக் கட்சி, திருமாவளவன்

மகளிர் உரிமை தொகை பெறும் பெண்களுக்கு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான தொகை ரூ.3 ஆயிரம், கோடைக்கால இடர்பாடுகளை எதிர்கொள்வதற்கு உதவித்தொகை ரூ.2 ஆயிரம் என 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இது மகளிரை மனம் குளிரச் செய்யும் மகத்தான அறிவிப்பாகும். இதைச் செயல்படுத்திய முதல்வர் ஸ்டாலினுக்கு பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த அறிவிப்பை வரவேற்கிறோம்.

துணை முதல்வர் உதயநிதி

தமிழகம் என்றால் மகளிர் நாடு என்பதை மீண்டும் உறுதி செய்திருக்கிறது முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு. பெண்களுக்கு இன்று ரூ.5 ஆயிரம் வழங்கப்பட்டு உள்ளது. இந்த மகிழ்ச்சியை மேலும் இரட்டிப்பாக்கும் வகையில், திராவிட மாடல் 2.0 ல் மகளிருக்கான உரிமைத்தொகையை 2 ஆயிரமாக உயர்த்தி வழங்குவோம் என முதல்வர் அறிவித்துள்ளார்கள். தமிழக மகளிர் வெல்லும், தமிழ் பெண்கள் ஆக நடைபோட என்றும் துணை நிற்போம்.

தவெக தான் போட்டி

தவெக தலைவர் விஜய் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: புதிதாகக் கோடைக் காலச் சிறப்புத் தொகை ரூ.2000 எனத் திடீரென அறிவித்தது எப்படி? இந்த ஆண்டு மட்டும்தான் கோடைக் காலம் வருகிறதா என்ன? வழக்கமாக மாதந்தோறும் 15ஆம் தேதி வரவு வைக்கப்படும் மகளிர் உரிமைத் தொகை, குறிப்பாக இன்று 13ஆம் தேதி வரவு வைக்கப்பட்டு அறிவிக்கப்படுவது ஏன்?

இத்தனைக்கும் காரணம் வீதிக்கு வீதி மட்டுமில்லாமல், வீட்டுக்கு வீடு ஒலிக்கும் விசில் சத்தம்தான். குறிப்பாக, ஒட்டுமொத்த மகளிரின் விசில் சின்னத்திற்கான பேராதரவு அலையைக் கண்டு உண்டான அச்சம் மட்டுமே இதற்குக் காரணம். ஒன்று மட்டும் உறுதியாகத் தெளிவாகிறது. நாம் மட்டுமே இவர்களுக்கு அச்சமூட்டச் செய்யும் வெற்றிக்கான மக்கள் சக்தி. அது மட்டுமா?

இவர்களை வலிய நல்லது செய்ய வைக்கும் வலிமையான அரசியல் பெருவிசையும் நாம்தான். அதுமட்டுமா? தி.மு.க. தனக்குப் போட்டியாகக் கருதுவதும் தன்னை வெல்லப் போகும் ஒரே மக்கள் சக்தி எனக் கருதுவதும் த.வெ.க.வைத் தான் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தமிழக முதல்வர் ஸ்டாலின் உறுதி செய்துள்ளார்.

எனவே, தாய்மார்களே, அக்கா, தங்கைகளே, உங்கள் மகன், உங்கள் அண்ணன், உங்கள் தம்பி விஜயின் அரசியல் வருகையின் தாக்கத்தால் கிடைத்த இந்தத் உரிமைத் தொகையைச் சந்தோசமாக வாங்கிக்கொள்ளுங்கள். நம் ஆட்சி மலர்ந்ததும், அரசியல் ஆதாயத்திற்காகச் சுயநலமாகச் செயல்படும் இவர்களைப் போலன்றி, உண்மையான அக்கறையுடன் நம் மக்களுக்கு அனைத்து வகைகளிலும் அனைத்து வழிகளிலும் நல்லது மட்டுமே செய்வோம். அது உறுதி.

திமுக அரசுக்குத் தேர்தல் தோல்விக்கான திகில் ஊட்டும் அளவிற்கு விசில் ஊதும் தமிழ்நாட்டு மகளிருக்கு என் மனமார்ந்த நன்றி. இவ்வாறு அந்த அறிக்கையில் விஜய் கூறியுள்ளார்.

## “கூட்டணி கட்சிகள் திமுகவுக்கு தாலி கட்டிய மனைவி போல் ஆகிவிட்டன” : செல்லூர் ராஜூ கிண்டல்

மதுரை: பிப்.14-

டிஎன்பிஎஸ்சி தேர்வு ரத்து விவகாரத்தில் எதிர்குரல் கொடுக்காமல், கூட்டணி கட்சிகள் திமுகவுக்கு தாலி கட்டிய மனைவி போல் ஆகிவிட்டன என முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ தெரிவித்தார்.

‘விடியா ஆட்சி, உங்கள் வீட்டு பில்லே சாட்சி’ என்ற தலைப்பில், அதிமுக சார்பில் பிரச்சாரம் நடை பெற்று வருகிறது. இது தொடர்பான செயலி மூலம் வீடுகள்தோறும் கணக்கெடுக்கும் பணியை, முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ மதுரையில் தொடங்கி வைத்தார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட தாலிக்கு தங்கம், மினி கிளினிக், மடிக்கணினி திட்டம் உள்ளிட்டவற்றை திமுக நிறுத்தி விட்டது தொடர்பாக, புதிதாக தொடங்கப்பட்டுள்ள செயலி மூலம் மக்களிடம் நேரடியாகச் சென்று சர்வே எடுக்கவுள்ளோம். திமுக ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வை ரத்து செய்வோம் எனக் கூறிவிட்டு, டிஎன்பிஎஸ்சி தேர்வை ரத்து செய்ததுதான் சாதனையாக உள்ளது.

டிஎன்பிஎஸ்சி தேர்வு ரத்து போன்ற நடவடிக்கைகளுக்கு திமுக கூட்டணிக் கட்சிகள் எதிர்த்து குரல் கொடுக்காமல், தாலி கட்டிய மனைவி போல் ஆகிவிட்டன. காங்கிரஸ் எதிர்த்து குரல் கொடுக்கிறது.

திருமாவளவனுக்கு தனது கட்சியை பிரித்து விடுவார்களோ என்ற அச்சத்தில் பேசாமல் உள்ளார். நாட்டிலேயே தமிழகத்தில் தான் தலித்துகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக, புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன.

இதற்கு, தமிழகத்தில் இருந்து எந்த கம்யூனிஸ்ட் கட்சிகளும் குரல் கொடுக்கவில்லை. விலைவாசி உயர்வு இல்லை, சட்டம் ஒழுங்கு பேணி பாதுகாக்கப்படுகிறது, போதைப்பொருள் நடமாட்டம் இல்லாத நல்லாட்சி கொடுக்கிறேன் என நடிகர் வடிவேலு போல் திமுகவினர் முதல்வரை புலம்ப வைத்துள்ளனர். திமுக நல்லாட்சி கொடுக்கிறது என்பதை மக்கள்தான் கூற வேண்டும் என்று கூறினார்.

# ரயில்வே சுற்றுலாத்துறையில் ‘கேட்டரிங்’ படித்தவர்களுக்கு வாய்ப்பு



பணி, பிப்.14-

ஹாஸ்பிட்டல் மானிட்டர் (ஐஆர்சிடிசி/மேற்கு மண்டலம்). மொத்த காலியிடங்கள்: 49.

வயது: 21.01.2026 தேதியின்படி 27க்குள் இருக்க வேண்டும். எஸ்சி/எஸ்டியினருக்கு 5 ஆண்டுகளும், ஒபிசியினருக்கு 3 ஆண்டுகளும், மாற்றுத்திறனாளிகளுக்கு 10 ஆண்டுகளும் அதிகபட்ச வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படும்.

சம்பளம்: ரூ.30 ஆயிரம் மற்றும் தினசரி படி ரூ.350 மற்றும் ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ். 'தகுதி: ஹாஸ்பிட்டலிட்டி மற்றும் ஹோட்டல் மேனேஜ்மென்ட்/குலினரி ஆர்ட்ஸ்/கேட்டரிங் சயின்ஸ்/டூரிஸம் ஆகிய பாடப்பிரிவுகள் ஏதாவது ஒன்றில் பிஎஸ்சி/பிபிஏ/எம்பிஏ தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இந்தி மற்றும் ஆங்கிலத்தில் பேசவும், எழுதவும் தெரிந்திருக்க வேண்டும். 2024ம் ஆண்டிற்கு முன் தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்க வேண்டாம். பணி அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பிக்க வேண்டாம்.

www.irctc.com என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, விவரங்களை பூர்த்தி செய்து, தேவையான அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் நகல்கள், 3 பாஸ்போர்ட் அளவு போட்டோக்கள் ஆகியவைகளை இணைத்து நேர்முகத் தேர்வின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம், முகவரிகள் தேதி வாரியாக இணையதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வு நடைபெறும் தேதி: 17.02.2026 முதல் 05.03.2026 வரை.

# துறைமுக ஆணையத்தில் வேலை



பணியிடங்கள் விவரம்:

1. எக்சிக்யூட்டிவ் இன்ஜினியர் (சிவில்): 1 இடம் (பொது). வயது: 35க்குள். சம்பளம்: ரூ.50,000 ரூ.1,60.000. தகுதி: சிவில் இன்ஜினியரிங் பிரிவில் இளநிலை பட்டப்படிப்பு தேர்ச்சியுடன் 5 வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

2. டிரெய்னி பைலட்: 5 இடங்கள் (எஸ்சி1, எஸ்டி1, ஒபிசி3). வயது: 40க்குள். சம்பளம்: ரூ.70,000 ரூ.2,00,000. தகுதி: அயல்நாடு கோயிங் ஷிப் பணிக்குரிய பைலட் பயிற்சி பெற்று சான்றிதழ் வைத்திருக்க வேண்டும். மேலும் ஒரு வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். மாதிரி விண்ணப்பம் மற்றும் கூடுதல் விவரங்களுக்கு www.mptgoa.gov.in என்ற இணையதளத்தை பார்க்கவும்.விண்ணப்பிக்க கடைசி நாள்: 17.02.2026.

# ம.பியில் மாணவர்களை விரட்டியடித்து காதலர் தின கொண்டாட்டத்திற்கு எதிர்ப்பு: கல்லூரிக்குள் புகுந்து டேபிள், சேரை உடைத்த கும்பல்




இந்தூர், பிப்.14-

இந்தூர் கல்லூரியில் நடந்த மாணவர் நிகழ்ச்சியில் புகுந்து பஜ்ரங் தளம் மற்றும் விஎச்பி அமைப்பினர் ரகளையில் ஈடுபட்டனர். மத்தியப் பிரதேசம் இந்தூரில் உள்ள கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் கல்விப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக வியாபாரத் திறனை வளர்க்க அவ்வப்போது விற்பனை கூடங்களை அமைப்பது வழக்கம். கடந்த காலங்களில் காதலர் தினத்தை ஒட்டி இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்ட போது சில அமைப்புகள் பல்வேறு எதிர்ப்புகளைத் தெரிவித்து வந்தன. இந்நிலையில் நேற்று காதலர் தின வாரத்தை முன்னிட்டு மாணவர்கள் பூக்கள் மற்றும் கரடி பொம்மைகளை விற்பனை செய்யும் சிறப்பு சந்தையை கல்லூரி வளாகத்தில் அமைத்தனர். அப்போது மதியம் 12.30 மணியளவில் காந்தி நகர் பகுதியில் உள்ள கல்லூரிக்குள் பஜ்ரங் தளம் மற்றும் விஎச்பி அமைப்பைச் சேர்ந்தவர்கள் அத்துமீறி நுழைந்தனர்.

இந்த நிகழ்ச்சி ‘ஆபாசத்தை தூண்டுவதாகவும், இந்து கலாசாரத்திற்கு எதிரானது’ எனவும் கூறி அவர்கள் முழக்கமிட்டனர். அங்கிருந்த நாற்காலிகள் மற்றும் மேஜைகளை அடித்து உடைத்த கும்பல், வளாகத்திலேயே அமர்ந்து அனுமன் சாலிசா பாடி ரகளையில் ஈடுபட்டதால் நிகழ்ச்சி பாதியிலேயே நிறுத்தப்பட்டது. இது குறித்து போலீசார் கூறுகையில், ‘வீடியோ ஆதாரங்களை ஆய்வு செய்து அத்துமீறலில் ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்’ என்றனர். பல்கலைக்கழக நிர்வாகம் இச்சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

# மார்ச் முதல் ஊதிய உயர்வு வழங்க அரசு உறுதி: 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் போராட்டம் வாபஸ்




சென்னை, பிப்.14-

மார்ச் மாதம் முதல் ஊதிய உயர்வு வழங்க அரசு உறுதியளித்ததை தொடர்ந்து, 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் அறிவித்த போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

தமிழகத்தில் 108 ஆம்புலன்ஸ் சேவையை நிர்வகித்து வரும் இஎம்ஆர்ஐ கிரீன் ஹெல்த் சர்வீஸ் நிறுவனத்தில் பணியாற்றும் ஓட்டுநர்கள், மருத்துவ உதவியாளர்களுக்கு முறையான ஊதியம் வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்பட்டு வந்தது.

இதையடுத்து, திமுகவின் தொழிற்சங்கமான தமிழ்நாடு 108 அவசர ஊர்தி தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தினர், பல்வேறு கட்டப் போராட்டங்களை முன்னெடுத்தனர். சென்னையில் டி.எம்.எஸ். வளாகத்திலிருந்து, முதல்வர் இல்லம் நோக்கி மாபெரும் பேரணி நடத்தப் போவதாக அறிவித்திருந்தனர்.

இதையடுத்து, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் மூன்று நாட்களாக பேச்சுவார்த்தை நடத்தினர். இப்பேச்சுவார்த்தையில் சுமூகத் தீர்வு எட்டப்பட்டுள்ளது. இதையடுத்து போராட்டம் வாபஸ் பெற்றதாக சங்கச் செயலாளர் இருளாண்டி தெரி வித்தார்.

# “ஒரு பிரச்சினையை சந்திக்கும் திறன் கூட விஜய்க்கு இல்லை!” பழனிசாமி தாக்கு



ஆம்பூர், பிப்.14-

“கரூரில் ஒரு பிரச்சினை நடந்தது. 72 நாட்கள் விஜய் வீட்டை விட்டே வெளியே வரவில்லை. ஒரு பிரச்சினை நடந்தவுடன் 15 நாள் கட்சி அலுவலகத்தை மூடிவிட்டு சென்றுவிட்டார். அப்புறம் எப்படி கட்சி நடத்தி மக்களுக்கு நல்லது செய்யப் போகிறார். ஒரு பிரச்சினையை சந்திக்கும் திறன்கூட அவருக்கு இல்லை” என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

ஆம்பூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, “சட்டப்பேரவை தேர்தலை காரணம் காட்டி மகளிர் உரிமைத் தொகையை நிறுத்திவிடுவார்கள் என எங்களையும், பாஜகவையும் குறிப்பிட்டு முதல்வர் ஸ்டாலின் சொல்லியிருக்கிறார். 2024 மக்களவைத் தேர்தலின்போது உரிமைத் தொகை நிறுத்தப்படவில்லை. அப்படி இருக்கையில் எப்படி வரும் தேர்தலில் நிறுத்த முடியும். ஒரு திட்டம் செயல்பாட்டில் இருக்கும்போது, அதனை தேர்தல் நேரத்தில் நிறுத்த முடியாது என்பதை நாடே அறியும்.

2026 தேர்தலில் தோற்றுவிடுவோம் என்ற பயத்தில்தான் இந்த ரூ.5000 அறிவிப்பை வெளியிட்டுள்ளார். வரும் மூன்று மாதங்களுக்கான தொகையை முன்பணமாக கொடுத்துள்ளார். மேலும், கோடை காலத்துக்காக ரூ.2000 சிறப்புத் தொகையும் கொடுத்துள்ளார். திமுக ஆட்சிக்கு வந்தபின்னர் 2022 முதல் ஒவ்வொரு ஆண்டும் கோடை காலம் வருகிறது, அப்படியானால் 2026ல் தேர்தல் வரும்போது மட்டும்தான் ஸ்டாலினுக்கு கோடை காலம் தெரிகிறதா?

திமுக மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டது, அதனால் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். பெண்கள் படும் கஷ்டங்களை பார்த்து உரிமைத் தொகையை கொடுக்கவில்லை. சட்டப்பேரவைத் தேர்தலில் தோற்றுவிடுவோம் என்று அஞ்சித்தான் இந்த பணத்தை கொடுக்கின்றார், வாக்குகளைப் பெறுவதற்காக.

வரும் 3 மாதம் உரிமைத் தொகை கிடைக்கவில்லை என்றால் மகளிர் கஷ்டப்படுவார்கள் என ஸ்டாலின் சொல்லியுள்ளார். 2021 தேர்தலின்போது மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என வாக்குறுதி அளித்தார். ஆனால், திமுக ஆட்சியமைத்து 27 மாதம் கழித்துதான் உரிமைத் தொகையை வழங்கினார். நாங்கள் தொடர்ந்து சட்டப்பேரவையில் அழுத்தம் கொடுத்ததால் தான் அப்போதும் உரிமைத் தொகை வழங்கப்பட்டது. 27 மாதம் தாமதமாக உரிமைத் தொகை பெற்ற பெண்கள் பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்களா?

20 லட்சம் பெண்களுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு தான் உரிமைத் தொகை வழங்கப்பட்டது. அவர்களுக்கு 55 மாதங்களாக அந்தத் தொகை வழங்கப்படவில்லை. அவர்கள் பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்களா?

ஜெயலலிதா கொண்டுவந்த மடிக்கணினி திட்டத்தை முடக்கிவிட்டு, தேர்தலுக்கு முன்னதாக திமுக அரசு கொடுக்கிறது. உரிய நேரத்தில் மடிக்கணினி வழங்கப்படாததால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்” எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அவர், “தமிழகம் வரும் அமித் ஷாவை சந்திப்பது குறித்து முடிவும் இல்லை. அதிமுக கூட்டணியில் இன்னும் சில கட்சிகள் வரவுள்ளன. தவெகவின் வருகை யாரை பாதிக்கும் எனத் தெரியவில்லை. விஜய் இன்னும் ஒரு தேர்தலைக் கூட சந்திக்கவில்லை. அவர்கள் தேர்தலை சந்தித்தால்தான் என்ன செல்வாக்கு உள்ளது எனத் தெரியும். தமிழக மக்கள் விழிப்புணர்வு கொண்டவர்கள்.

விஜய்க்கு என்ன தெரியும்? கரூரில் ஒரு பிரச்சினை நடந்தது, 72 நாட்கள் அவர் வீட்டை விட்டே வெளியே வரவில்லை. ஏன் வீட்டை விட்டு வெளியே வரவில்லை என கேட்பதாக விஜய் சொல்கிறார். தலைவர் என்றால் கேள்வி கேட்கத்தான் செய்வார்கள். பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். நீங்கள் எவ்வளவு கேள்வி கேட்கிறீர்கள்.

ஒரு கட்சியை நடத்தினால், நிருபர்கள், மக்கள் கேட்கும் கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டியது தலைவரின் கடமை. அதனை அவர் செய்துள்ளாரா? பிரச்சினை நடந்தவுடன் 15 நாட்கள் கட்சி அலுவலகத்தை மூடிவிட்டு சென்றுவிட்டார். அப்புறம் எப்படி கட்சி நடத்தி மக்களுக்கு நல்லது செய்யப் போகிறார். ஒரு பிரச்சினையை சந்திக்கும் திறன்கூட அவருக்கு இல்லை. இது ஜனநாயக நாடு. யாரும் கட்சி தொடங்கலாம். மக்கள் அங்கிகரித்தால் வெற்றி பெறலாம்” என்றார்.

# தொழிற்சங்கங்கள் நடத்திய நாடு தழுவிய முழு அடைப்பு போராட்டம் தாக்கம் எப்படி



புதுடெல்லி. பிப்.14-

பல்வேறு தொழிற்சங்கங்கள் இணைந்து நடத்திய நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தால் பெரும்பாலான இடங்களில் இயல்பு வாழ்க்கையில் பாதிப்பும் ஏற்படவில்லை.

தொழிலாளர் விரோத சட்டங்களை திரும்பப் பெற வேண்டும், மகாத்மா காந்தி கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிற்சங்கங்கள் இணைந்து நாடு தழுவிய வேலை நிறுத்த போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருந்தது. அதன்படி பல்வேறு தொழிற் சங்கங்களின் வேலை நிறுத்த போராட்டம் நேற்று நாடு முழுவதும் நடைபெற்றது.

இந்த போராட்டத்தால் நாடு முழுவதும் சகஜமான நிலையே இருந்தது. மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை. அதே நேரத்தில் ஒடிசா, கேரளா, தமிழ்நாடு, கோவா, ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், மத்திய பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஓரளவுக்கு ஆதரவு இருந்தது. ஒடிசா, கேரளா ஆகிய மாநிலங்களில் பேருந்து போக்குவரத்து தடைபட்டதால் பொதுமக்கள் அவதிக்குள்ளாயினர்.

ஒடிசாவில் நடைபெற்ற 12 மணி நேர போராட்டத்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை ஓரளவுக்கு பாதிக்கப்பட்டது. இங்கு பொதுப் போக்குவரத்து முடங்கியது. மார்க்கெட்கள், கல்வி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், கடைகள் மூடப்பட்டிருந்தன.

அதேபோல் கேரள மாநிலத்தில் தொழிற்சங்கங்களின் 24 மணி நேர வேலை நிறுத்தம் நேற்று முன்தினம் நள்ளிரவே தொடங்கியது. ஐக்கிய விவசாயிகள் முன்னணி, விவசாய தொழிலாளர் அமைப்புகள், சிபிஎம், சிபிஐ உள்ளிட்ட அரசியல் கட்சிகள் வேலை நிறுத்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தன.

இதனால் மாநிலம் முழுவதும் அரசு பேருந்துகள் இயக்கப்படவில்லை. அதைப் போலவே தனியார் பேருந்துகளும் இயங்கவில்லை. ஆட்டோ, டாக்ஸிகளும் இயங்கவில்லை. கடைகள், வர்த்தக வளாகங்கள் மூடப்பட்டிருந்தன. இதனால் மாநிலம் முழுவதும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. கொச்சி, திருவனந்தபுரம், கோழிக்கோடு உள்ளிட்ட பகுதிகளில் வேலை நிறுத்தம் வெற்றி பெற்றது.

# சேலத்தில் விஜய் பிரச்சார கூட்டத்தில் சிக்கி உயிரிழந்த நபரின் குடும்பத்தினருக்கு செல்வப்பெருந்தகை இரங்கல்



சென்னை, பிப்.14.-

சேலத்தில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள் மற்றும் பிரசாரக் கூட்டத்தின் போது ஏற்பட்ட துயரச் சம்பவத்தில் சூரஜ் என்ற சகோதரர் உயிரிழந்துள்ளார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையும் ஆழ்ந்த வருத்தமும் அடைந்தேன். இளம் வயதில், பொதுநிகழ்வில் பங்கேற்ற ஒருவரின் உயிர் இவ்வாறு பறிபோனது மிகுந்த மனவேதனையை ஏற்படுத்துகிறது.Long Distance Bus & Rail

அவரது மறைவு குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், அவரை நேசித்த அனைவருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டு தற்போது மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் அனைவரும் விரைவாகவும் முழுமையாகவும் நலம்பெற வேண்டும் என்று விரும்புகிறேன். உயிரிழந்த சூரஜ் சகோதரரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# ஈரோடு மாவட்ட ஆதிதிராவிடர் பழங்குடியின இளைஞர்களுக்கான அரிய வாய்ப்பு ஆட்சியர் அறிவிப்பு

ஈரோடு, பிப்.14-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) நடத்தும் இலவச அழகுக்கலை (Cosmetology) பயிற்சி!

பயிற்சிகள்: ஒப்பனை, அழகுக்கலை மற்றும் தர்மப்ளேனிங் (Dermaplaining). கால அளவு: 90 நாட்கள் (இராணிப்பேட்டை - கோயம்புத்தூரில்), தங்குமிடம் மற்றும் உணவுச் செலவு முழுவதும் இலவசம்! (தாட்கோ ஏற்கும்), பயிற்சி முடித்தவுடன் மாதம் ₹18,000 முதல் ₹25,000 வரை ஊதியத்துடன் கூடிய வேலை உறுதி.

விண்ணப்பிக்கத் தகுதிகள்: இனம்: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (SC/ST), கல்வி: 8ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்தவர்கள், வயது: 18 முதல் 35 வயது வரை, ஆண்டு வருமானம் ₹ 3 லட்சத்திற்குள் இருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: தகுதியுள்ள நபர்கள் உடனே www.tahdco.com என்ற இணையதளத்தில் பதிவு செய்யவும், மேலதிக விபரங்களுக்கு, மாவட்ட மேலாளர் அலுவலகம் (TAHDCO), 6வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு, தொலைபேசி: 0424 2259453.

# கோரிக்கைகளை வலியுறுத்தி கருணாநிதி படத்துடன் பேரணியாக சென்ற மருத்துவர்கள் கைது

சென்னை, பிப்.14-

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கருணாநிதி புகைப்படத்தை ஏந்தி பேரணியாகச் சென்ற மருத்துவர்களை போலீஸார் கைது செய்தனர்.



தமிழக அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மாதம் ரூ.3 ஆயிரம் ஊக்கத்தொகை, முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆட்சியில் பிறப்பிக்கப்பட்ட அரசாணை 354ஐ மறு ஆய்வு செய்தல், நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய பணியிடங்களை உருவாக்குதல் உள்ளிட்ட நீண்டகால கோரிக்கைகளை வலியுறுத்தி, அரசு மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பினர் கடந்த சில நாட்களாக பல்வேறு கட்ட போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை வளாகத்திலிருந்து மருத்துவர்கள் பிரம்மாண்ட பேரணியைத் தொடங்கினர்.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் புகைப்படத்தை ஏந்தியபடி அமைதியாகச் சென்ற மருத்துவர்கள், அண்ணா சாலையில் உள்ள அவரது உருவச்சிலை அருகே வந்தடைந்தனர்.

அப்போது அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த போலீஸார் மருத்துவர்களைத் தடுத்து நிறுத்தி, வலுக்கட்டாயமாக வாகனங்களில் ஏற்றி கைது செய்தனர். இதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பெரும் பரபரப்பு நிலவியது.

இதுகுறித்து கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் பாலகிருஷ்ணன் மற்றும் ராமலிங்கம் கூறுகையில், “அரசுடன் நடத்திய பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகளின் போது எங்களுக்குப் பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன.

ஆனால், அவை இன்றுவரை காகித அளவிலேயே உள்ளன. எங்களது நியாயமான உரிமைகளுக்காகவே நாங்கள் போராடுகிறோம். கருணாநிதி சிலை அருகே எங்களை போலீஸார் கைது செய்திருப்பது வருத்தமளிக்கிறது. கோரிக்கைகள் நிறைவேறும் வரை எங்களின் போராட்டம் ஓயாது'' என்றனர்.



# மகளிர் உரிமைத் தொகை ரூ. 5,000 நெகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போயினர் பாறைப்பட்டி தாய்மார்கள்

சின்னாளபட்டி, பிப். 14-:

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் இந்த மாதம் கூடுதலாக நிதி வழங்கியதை அடுத்து, திண்டுக்கல் மாவட்டம் எஸ்.பாறைப்பட்டி கிராமத்தில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது.

வழக்கமாக வழங்கப்படும் ஆயிரம் ரூபாயுடன், பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான தொகை மற்றும் கோடை விடுமுறையை முன்னிட்டு வழங்கப்பட்ட கூடுதல் நிதி என மொத்தம் ரூ. 5,000 மகளிரின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டுள்ளது. இன்று காலை தங்களது கைபேசிக்கு வந்த குறுஞ் செய்தியைப் பார்த்த தாய்மார்கள் நெகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போயினர். தமிழக முதல்வருக்குத் தாய்மார்கள் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர்.

திமுக தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன் தலைமையில், பட்டாசுகள் வெடிக்கப்பட்டு, இனிப்புகள் வழங்கப்பட்டன. திமுக ஒன்றிய பிரதிநிதி முருகன், கிளைச் செயலாளர்கள் சாமிராஜ், பாண்டி, வடிவேலு மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




# பாலமேடு பத்திரகாளியம்மன் மெட்ரிகுலேஷன் பள்ளி 37வது ஆண்டு விழா கோலாகலம்

மதுரை, பிப்.14-

மதுரை மாவட்டம் பாலமேட்டில் உறவின் முறை சங்கத்திற்கு பாத்தியப்பட்ட பத்திரகாளியம்மன் மெட்ரிகுலேஷன் பள்ளியின் 37வது ஆண்டு விழா நடைபெற்றது. உறவின்முறை சங்கத் தலைவர் ஜோதி தங்கமணி, தலைமை தாங்கினார். மெட்ரிகுலேஷன் பள்ளி தலைவர்நாகராஜன், துணைத் தலைவர் சுரேஷ், முன்னிலையில் நடைபெற்றது. தலைமையாசிரியர் ரதி பிரியா, அனைவரையும் வரவேற்றார்.தியாகராஜர்

கல்லூரி முன்னாள் முதல்வர் ராஜா கோவிந்தசாமி, இலக்கிய மன்ற நிறுவனர் அவனிமாடசாமி, சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். பள்ளி யின்செயலாளர்சேகர், ஆண்டறிக்கை வாசித்தார்.

உறவின்முறை சங்க செயலாளர் மயில்வாகனன், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் மாரிசாமி, மற்றும் பலர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் நடன நாட்டிய நிகழ்ச்சி மற்றும் பேச்சுப்போட்டி உள்ளிட்டவை நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன..இதில் மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# திமுக அரசைக் கண்டித்து அலங்காநல்லூரில் அதிமுக சார்பில் பிரம்மாண்ட கண்டன ஆர்ப்பாட்டம்

மதுரை, பிப்.14-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் யூனியன் அலுவலகம் அருகே, திமுக அரசின் மக்கள் விரோத போக்கைக் கண்டித்து அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அதிமுக ஒன்றிய செயலாளர் கல்லணை ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். நகர செயலாளர் அழகுராஜ் முன்னிலை வகித்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாணிக்கம் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய முன்னாள் எம்.எல்.ஏ மாணிக்கம், திமுக அரசுக்கு எதிராகப் பல்வேறு புகார்களை முன்வைத்தார். வாக்குறுதி மீறல்: கடந்த சட்டமன்றத் தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை. 'நீட் தேர்வு' ரத்து செய்யப்படும் என்று கூறி மக்களை ஏமாற்றி விட்டனர். ஆட்சிக்கு வரும் போது அனைவருக்கும் மகளிர் உதவித்தொகை வழங்கப்படும் எனத் தெரிவித்துவிட்டு, தற்போது தகுதி பார்த்து வழங்குகின்றனர். தோல்வி பயம் காரணமாகவே தற்போது 5,000 ரூபாய் வழங்கப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக பள்ளி மாணவமாணவியருக்கு மடிக்கணினி வழங்காமல், தற்போது தேர்தல் நெருங்கும் வேளையில் மட்டும் வழங்கத் தொடங்கியுள்ளனர்.

திராவிட மாடல் அவலம்: திராவிட மாடல் ஆட்சி என்று கூறிக்கொண்டு ரவுடிசம் செய்வதையே வாடிக்கையாக வைத்துள்ளனர். புகார் பெட்டி எங்கே?: ஆட்சிக்கு வரும் முன் 100 நாட்களில் குறைகளைத் தீர்ப்பதாகக் கூறி பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்ற 'புகார் பெட்டி' தற்போது எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லை.

பங்கேற்ற முக்கிய நிர்வாகிகள்:

அதிமுக: மாவட்ட இணைச்செயலாளர் ஜெயச்சந்திரன் மணியன், அண்ணா தொழிற்சங்க ஒன்றிய செயலாளர் சுந்தர்ராஜன், நகரப் பொருளாளர் சுந்தரராகவன், இணைச்செயலாளர் புலியம்மாள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மாணிக்கம் உள்ளிட்டோர்.

அமமுக: ஒன்றிய செயலாளர்கள் வழக்கறிஞர் கோடீஸ்வரன் மற்றும் ரகு.

பாஜக: தேசிய பொதுக்குழு உறுப்பினர் பழனிவேல்சாமி, மாவட்டத் துணைத் தலைவர் கோவிந்தமூர்த்தி, ஒன்றிய தலைவர்கள் இருளப்பன், முனீஸ்வரி.




■ திண்டுக்கல் சட்டமன்ற தொகுதி திமுக மகளிர் அணியினர் சார்பில் வெல்லும் தமிழ்ப்பெண்கள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி. செந்தில்குமார் உரையாற்றினார்.

# "மகளிருக்கு ரூ.5,000 'இன்ப அதிர்ச்சி' ஏன்?" அமைச்சர் ரகுபதி விளக்கம்

சென்னை, பிப்.14.-

"சட்டமன்றத் தேர்தலை சாக்காக வைத்து மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை முடக்க பாஜகவும், அதிமுகவும் இணைந்து நீதிமன்ற வழக்குகள் மூலம் திட்டம் போட்டனர்" என அமைச்சர் ரகுபதி தெரி வித்துள்ளார்.



இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "மகளிர் உரிமைத் தொகை பெறும் பெண்களின் வங்கிக் கணக்குகளில் இம்மாதம் ரூ.5,000 வரவு வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மகளிருக்கு ரூ.5 ஆயிரம் வழங்கி முதல்வர் இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ளார்.

நாங்கள் இந்தத் திட்டத்தை அறிவித்துவிட்டு செய்தோம் என்றால், உடனே நீதிமன்றத்துக்குச் சென்று தடை உத்தரவு வாங்கி விடுவார்கள். இதனால் மக்களுக்கு கிடைக்கக்கூடிய ஐந்தாயிரம் ரூபாய் கிடைக்காமல் போய்விடும். எனவேதான் அதற்கு முன்னதாகவே காலையிலேயே முதல்வர் இதை அறிவித்தார்.

பாஜகவும் அதிமுகவும் எத்தனை கூட்டு சதிகளை செய்தாலும், திராவிட மாடல் 2.0 அமைவதையோ, அதன் மூலம் மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளை தடுக்க முடியாது.

முதல்வர் ஸ்டாலின் மகளிருக்கு கொடுத்த பணம் டாஸ்மாக்கு வரவில்லை. பெண்கள் இதை வரவேற்கிறார்கள். மகளிர் உரிமைத் தொகையை விமர்சிக்க பாஜகவுக்கு தகுதியில்லை. திமுகஅரசைப் போன்று பாஜக ஆளும் மாநிலங்களிலும் உதவித் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. பாஜகவும், அதிமுகவும் இத்திட்டத்தை முடக்க சதி செய்ததால்தான் முன்கூட்டியே மகளிர் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது .

இரண்டு வாரத்துக்குள் தமிழக மக்களுக்கு 9 ஆயிரம் ரூபாய் கிடைத்துள்ளது. அனைவரும், தேர்தலுக்கு முன்னதாக வாக்குறுதிகள் தான் கொடுப்பார்கள். ஆனால் தேர்தலுக்கு முன்னதாக அதை நிறைவேற்றிய ஆட்சி திமுகதான்.

இலவச திட்டங்களை வழங்குவது நாட்டின் வளர்ச்சிக்கு ஆபத்தானது. இதனால் வரி செலுத்துவோரின் பணம் வீணாகிறது என்று வசை பாடியவர் பிரதமர் மோடி. மக்களுக்கு பயன் தருகிற விடியல் பயணம் திட்டத்தையும் விட்டு வைக்கவில்லை. வரிப் பணத்தை வீணாக்கும் செயல் என பேசினார், ஆனால், அது மக்களை வாழவைக்கும் செயல் என சொன்னவர் முதல்வர் ஸ்டாலின்.

பெண்களுக்கு விடியல் பயணம் திட்டத்தை அறிமுகப் படுத்தியபோது அதை கொச்சைப்படுத்தியவர் பொய்ப்பாடி பழனிசாமி. கரோனாவை காரணம் காட்டி தாலிக்கு தங்கம், லேப்டாப் திட்டங்களை நிறுத்தியவர் எடப்பாடி பழனிசாமி. மகளிர் உரிமை தொகையை நிறுத்தி வைக்க பாஜக, அதிமுக சதி செய்கிறது. சட்டமன்றத் தேர்தலை சாக்காக வைத்து இந்தத் திட்டத்தை முடக்க பாஜக அதிமுக இணைந்து நீதிமன்ற வழக்குகள் மூலம் திட்டம் போட்டனர்" என்றார்.

# தபால் துறையில் 2019 இடங்கள்

பணி, பிப்.14.-

கிராமின் டக் சேவக்ஸ்: இப் பணியின் கீழ் 3 வகையான பணிகளுக்கு விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்படுவர்.




1. பிராஞ்ச் போஸ்ட் மாஸ்டர்ஸ் (பிபிஎம்): இப் பணியில் சேர குறைந்தது 10ம் வகுப்பு தேர்ச்சியுடன் அடிப்படை கம்ப்யூட்டர் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். பணிக்கு தேர்வு செய்யப்படும் பட்சத்தில் தபால் நிலைய பொறுப்பாளராக அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். அதாவது பொதுமக்களுக்கு தபால் துறை சேவைகளை வழங்குவது, பைல்கள் மற்றும் ரிக்கார்டுகளை கையாள்வது, தபால் துறையின் கீழ் செயல்படும் போஸ்ட் பேமெண்ட் பேங்க் தொடர்பாக பணிகளை மேற்கொள்வது ஆகியவை ஆகும்.

2. அசிஸ்டென்ட் பிராஞ்ச் போஸ்ட் மாஸ்டர் (ஏபிபிஎம்): 10ம் வகுப்பு தேர்ச்சியுடன் அடிப்படை கம்ப்யூட்டர் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் ஸ்டாம்ப்ஸ் மற்றும் ஸ்டேஷனரி பொருட்களை விற்பனை செய்வது/ வாடிக்கையாளரின் இருப்பிடத்திற்கே சென்று தபால்களை பட்டுவாடா செய்வது/தபால்களை புக்கிங் செய்வது/ பண பரிவர்த்தனைகளை மேற்கொள்வது ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

3. டக் சேவக்: 10ம் வகுப்பு தேர்ச்சியுடன் அடிப்படை கம்ப்யூட்டர் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். தபால்துறை பணிகளில் போஸ்ட் மாஸ்டர் மற்றும் அசிஸ்டென்ட் போஸ்ட் மாஸ்டர் ஆகியோருக்கு உதவி செய்ய வேண்டும்.

வயது வரம்பு: 18 முதல் 40க்குள். எஸ்சி/எஸ்டி/ ஓபிசி/மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு மத்திய அரசு விதிமுறைப்படி தளர்வு அளிக்கப்படும்.

10ம் வகுப்பில் பெற்றுள்ள மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இதுபற்றிய தகவல் எஸ்எம்எஸ் மூலம் தெரிவிக்கப்படும். தகவல் கிடைத்த 30 நாட்களுக்குள் இன்டர்நெட் வசதி, மின் இணைப்புடன் கூடிய கட்டிடத்தை ஜிடிஎஸ் போஸ்ட் ஆபீஸ் இயக்குவதற்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ தயார் செய்ய வேண்டும்.கட்டிடம் தரை தளத்தில் ஊரின் முக்கிய பகுதியில் அமைந்திருக்க வேண்டும். ஒன்றிய அல்லது மாநில அரசுக்கு சொந்தமான கட்டிடமாக இருப்பது விரும்பத்தக்கது. பணி நியமனம் செய்யப்படுபவர்கள், அதே கிராமத்திலோ அல்லது அருகில் உள்ள கிராமத்தில் வசிப்பவராகவோ இருக்க வேண்டும். சைக்கிள் அல்லது இரு சக்கர வாகனம் ஓட்ட தெரிந்திருக்க வேண்டும்.

சம்பளம்:

1. பிராஞ்ச் போஸ்ட் மாஸ்டர் ரூ.12,000 ரூ.29,380.

2. உதவி பிராஞ்ச் போஸ்ட் மாஸ்டர்/ டக்சேவக் ரூ.10,000 ரூ.24,470.

கட்டணம்: ரூ.100/. இதை ஆன்லைனில் செலுத்த வேண்டும். எஸ்சி/எஸ்டி யினர்/மாற்றுத்திறனாளிகள்/ திருநங்கைகள் / பெண்களுக்கு கட்டணம் கிடையாது.

விண்ணப்பதாரர்கள் www.indiapost.gov.in/ gdsonlineengagement என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 16.02.2026.



# "தமிழகத்தை வஞ்சித்த பாஜகவை , "டெல்லிக்கு அடிமையான அதிமுகவை கண்டிக்கிறோம்

ஆத்தூர், பிப்.14-

மத்திய அரசை கண்டித்து பித்தளைபட்டியில் பிரம்மாண்ட கண்டன ஆர்ப்பாட்டம்*

மத்திய பட்ஜெட்டில் தமிழகத்திற்குப் போதிய நிதி ஒதுக்காத மத்திய பாஜ அரசைக் கண்டித்தும், அதற்குத் துணை போகும் அதிமுகவை கண்டித்தும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஆத்தூர் ஒன்றியம், பித்தளைபட்டி பிரிவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், காங்கிரஸ், சிபிஎம், சிபிஐ, எஸ்டிபிஐ, தமிழக வாழ்வுரிமை கட்சி மற்றும் ஆதித்தமிழர் பேரவை உள்ளிட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.கோஷங்கள்: "தமிழகத்தின் நிதி எங்கே?", "தமிழகத்தை வஞ்சித்த பாஜவை கண்டிக்கிறோம்", "டெல்லிக்கு அடிமையான அதிமுகவை கண்டிக்கிறோம்" போன்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

பங்கேற்பாளர்கள்: ஆத்தூர் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு ஒன்றியங்களைச் சேர்ந்த திமுக மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மகளிர் அணியினர் என நூற்றுக்கணக்கானோர் திரளாகக் கலந்துகொண்டனர். தமிழகம் முழுவதும் 1,500க்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்ற இந்த தொடர் போராட்டத்தின் ஒரு பகுதியாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் நன்றியுரை வழங்கினார்.

# வங்கதேச தேர்தல் முடிவுகள் | 'இந்தியாவுக்கு நன்றி. இரு தரப்பு உறவு வலுப்படும்' பிஎன்பி நம்பிக்கை

டாக்கா, பிப்.14.-

வங்கதேச தேர்தல் முடிவுகளை அங்கீகரித்ததற்காகவும், தாரிக் ரஹ்மானுக்கு வாழ்த்து தெரி வித்ததற்காகவும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிப்பதாக வங்கதேச தேசியவாத கட்சி தெரி வித்துள்ளது.




வங்கதேச நாடாளுமன்றத்துக்கு நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தலில், 59.44 சதவீத வாக்குகள் பதிவாகின. இதையடுத்து, வாக்கு எண்ணும் பணி தொடங்கப்பட்டது. மொத்தமுள்ள 299 இடங்களில், வங்கதேச தேசியவாத கட்சி (பிஎன்பி) தலைமையிலான கூட்டணி 212 இடங்களில் வெற்றி பெறும் நிலையில் உள்ளது.

ஜமாத் இ இஸ்லாமி தலைமையிலான கூட்டணி 70 இடங்களில் வெற்றி பெறும் நிலையில் உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. பிஎன்பி 181 இடங்களில் வெற்றி பெற்றுள்ளதாகவும், ஜமாத் இ இஸ்லாமி 61 இடங்களில் வெற்றி பெற்றுள்ளதாகவும் அந்நாட்டின் தேர்தல் ஆணையம் அறி வித்துள்ளது.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ள பிஎன்பி கட்சியின் தலைவர் தாரிக் ரஹ்மானுக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. வங்கதேசத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தொண்டர்கள், டாக்காவில் உள்ள பிஎன்பி தலைமையகத்தில் குவிந்த வண்ணம் உள்ளனர்.

தேர்தல் முடிவுகளை அடுத்து பிரதமர் நரேந்திர மோடி, தாரிக் ரஹ்மானுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ''வங்கதேச நாடாளுமன்றத் தேர்தலில் தீர்க்கமான வெற்றியை நோக்கி மக்களை அழைத்துச் சென்ற தாரிக் ரஹ்மானுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வெற்றி, வங்கதேச மக்கள் உங்கள் தலைமை மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் காட்டுகிறது.

ஜனநாயக, முற்போக்கான, அனைவரையும் உள்ளடக்கிய வாங்கதேசத்துக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும். நமது பன்முக உறவுகளை வலுப்படுத்தவும், நமது பொதுவான வளர்ச்சி இலக்குகளை முன்னேற்றவும் உங்களுடன் இணைந்து பணியாற்றுவதை நான் எதிர்நோக்குகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவரும் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், ''இந்தியாவும் வங்கதேசமும் வரலாறு, மொழி, கலச்சாரம் மற்றும் பல பொதுவான பண்புகளில் ஆழமாக வேரூன்றிய பிணைப்புகளை பகிர்ந்து கொள்கின்றன. நமது பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் அமைதிக்காக, ஜனநாயகப்பூர்வமான, முற்போக்கான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வங்கதேசம், அனைத்து இந்தியர்களாலும் ஆதரிக்கப்படும்'' என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துக்கு வங்கதேச தேசிய கட்சி நன்றி தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் 2026 தேர்தலுக்கான தலைமை ஒருங்கிணைப்பாளர் நஸ்ரூல் இஸ்லாம் கான், ''எங்கள் தலைவர் தாரிக் ரஹ்மானை வாழ்த்தியதற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

ஒரு ஜனநாயக நாடு, மக்களின் தீர்ப்பை அங்கீகரித்திருப்பது மிகவும் நல்லது. நரேந்திர மோடி இதைச் செய்துள்ளார். அவருக்கு நாங்கள் நன்றியை தெரி வித்துக்கொள்கிறோம். எங்கள் தலைவர் தாரிக் ரஹ்மான் தலைமையில் இரு நாடுகளுக்கும், இரு நாட்டு மக்களுக்கும் இடையேயான உறவு பலப்படுத்தப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்'' என்று தெரிவித்துள்ளார்.

# புளியங்குடி கால்வாயில் கொட்டப்படும் கோழிக்கழிவுகள் கிராம மக்கள் நோய் பாதிப்பு

புளியங்குடி, பிப்.14-

தென்காசி மாவட்டம் நெல்கட்டும் செவல் கிராமத்தில் உள்ள பட்டாகுளம், வியாகுளம் ஆகியவற்றுக்கு வரும் நீர்வரத்து கால்வாயில், அருகில் உள்ள தனியார் கோழிப்பண்ணை கழிவுகளைக் கொட்டுவதாகப் புகார் எழுந்துள்ளது.*முக்கியப் பாதிப்புகள்:*



நீர் மாசு: கழிவுகளால் குளத்து நீர் மற்றும் நிலத்தடி நீர் துர்நாற்றத்துடன் கடும் மாசடைந்துள்ளது.

சுகாதாரச் சீர்கேடு: அசுத்தமான நீரைப் பயன்படுத்துவதால் குழந்தைகளுக்கு நோய் தொற்று ஏற்படுவதோடு, பொதுமக்களுக்கு தோல் நோய்கள் பரவி வருகின்றன. விவசாயம் பாதிப்பு: குளத்து நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அதிகாரிகளிடம் பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை என சமூக ஆர்வலர் மகேந்திரன் வேதனை தெரிவித்துள்ளார். நீர் நிலைகளை மாசுபடுத்தும் பண்ணை மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கொடைக்கானல் பூம்பாறை குழந்தை வேலப்பர் கோவில் தேரோட்டம்

திண்டுக்கல், பிப்.14-

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைப்பகுதியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பூம்பாறை குழந்தை வேலப்பர் திருக்கோவில் தை திருவிழா தேரோட்டம் இன்று வெகு விமர்சையாக நடைபெற்றது.



*விசேஷ பூஜைகளும் அலங்காரமும்*

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலின் கட்டுப்பாட்டில் உள்ள இக்கோவிலில், தை மாதத் திருவிழாவை முன்னிட்டு முருகப்பெருமானுக்குச் சிறப்பு அபிஷேகங்களும், ராஜ அலங்காரமும் செய்யப்பட்டன. பின்னர் உற்சவர் குழந்தை வேலப்பர் திருத்தேரில் எழுந்தருளினார்.

இத்திருவிழாவின் மிக முக்கிய நிகழ்வான 'காய் எறிதல்' (தேங்காய் உடைத்தல்) பிரசித்தி பெற்றதாகும்.

பூம்பாறை மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள், பெண்கள் ஆங்காங்கே பொங்கலிட்டு முருகனுக்குப் படைத்து வழிபட்டனர். அனைத்து அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் உள்ளூர் முக்கியப் பிரமுகர்கள் திரளாகப் பங்கேற்றனர். விழா ஏற்பாடுகளைக் கோவில் நிர்வாகத்தினர் மற்றும் ஊர் பொதுமக்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.



■ திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், அண்ணா நகர் பகுதியில்,அதிமுக சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் பற்றியும், கிராம மக்களின் 125 நாள் வேலை உறுதி அளிப்பு திட்டத்தை பொதுமக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டு பண்ணும் வகையில் வதந்திகள் பரப்புவதாக கூறி கோஷங்கள் எழுப்பப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பழனி சட்டமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினர் வேணுகோபால், நகர கழக செயலாளர் மா.ஶ்ரீதர், நகர துணைச் செயலாளர் ஜாபர் சாதிக், கொடைக்கானல் அதிமுக நகர்மன்ற உறுப்பினர்கள், நகர ஒன்றிய நிர்வாகிகள், மற்றும் பெரும்பாலான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# புளியங்குடியில் தவ்ஹீத் ஜமாத் சார்பில் மதரசா ஆண்டு விழா

புளியங்குடி, பிப். 14-

தென்காசி மாவட்டம் புளியங்குடி கிழக்கு கிளை தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் சார்பில், 'தாருல் ஹுதா' மதரஸாவின் ஆண்டு நிறைவு விழா மற்றும் மார்க்க விளக்கக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.




கிளைத் தலைவர் சையது இப்ராஹிம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், மாணவ மாணவியருக்கான பேச்சுப் போட்டி, கிராஅத் மற்றும் கேள்விபதில் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் பங்கேற்ற அனைத்து மாணவமாணவியரின் கல்வித் தேடலை ஊக்கப்படுத்தும் விதமாக அவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற மாநிலப் பேச்சாளர் சகோதரர் சுஜா அலி M.I.Sc, "ரமலானை வரவேற்போம்" என்ற தலைப்பில் மார்க்க உரையாற்றினார். நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர் முகமது அலி பிலால், அப்துல் பாசித் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்ட இதற்கான ஏற்பாடுகளை கிளைச் செயலாளர் இப்ராகிம்சா, பொருளாளர் முஹம்மது மைதின் மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர். நிறைவாக, கிளைப் பொருளாளர் முஹம்மது மைதின் நன்றியுரையாற்றினார்.

# பல்லடத்தில் பழைய ஓய்வூதியத் திட்டம் கோரி பார்வேர்ட் பிளாக் கட்சி ஆர்ப்பாட்டம்

பல்லடம் பிப்.14-

அரசு ஊழியர்களுக்குப் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பல்லடத்தில் அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.




அரசு ஊழியர்களின் நீண்டகால கோரிக்கையான பழைய ஓய்வூதியத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும். தற்காலிகமாகப் பணியாற்றும் செவிலியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். மின் கட்டணத்தை மாதம் தோறும் கணக்கீடு செய்யும் முறையைக் கொண்டு வர வேண்டும். மாணவர்களின் நலன் கருதி நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும்.

ஆர்ப்பாட்டத்திற்கு அக்கட்சியின் மாநிலத் துணைத் தலைவர் தேளி கே.காளிமுத்து தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் தாமோதரன், துணைத் தலைவர்கள் தனசேகர், வெள்ளதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொழிற்சங்க மாநில பொதுச்செயலாளர் திருப்பதி, மாநிலத் தலைவர் நல்லமுத்து, மாவட்டத் தலைவர் திருநாவுக்கரசு, மாவட்டச் செயலாளர் ரமேஷ், ஐ.டி. அணி கோகுல் உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர். முடிவில், மாவட்ட இளைஞரணித் தலைவர் சக்திவேல் நன்றி கூறினார்.




# மனிதநேயத்தின் சிகரம் 20,000 பேருக்கு ரத்ததானம் வழங்கி சாதனை படைக்கும் 'அவசரகால மக்கள் உதவி குழு'!

கொடைக்கானல், பிப்.14-

கொடைக்கானல் அவசரகால மக்கள் உதவி குழுவின் 7ஆம் ஆண்டு தொடக்கத்தை முன்னிட்டு சிறப்பு கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. கொரோனா காலத்தில் 60 பேருடன் தொடங்கப்பட்ட இக்குழு, இன்று 1500 உறுப்பினர்களுடன் பிரம்மாண்டமாகச் செயல்பட்டு வருகிறது.

முக்கியச் சாதனைகள் உயிர் காக்கும் சேவை: இதுவரை 20,000 க்கும் மேற்பட்டோருக்கு ரத்ததானம் வழங்கி சாதனை.

கல்வி உதவி: 1,000 க்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் கல்வி கட்டணம் செலுத்தி உதவி.

பேரிடர் நிவாரணம்: சென்னை, கடலூர், வயநாடு நிலச்சரிவு காலங்களில் பெரும் நிவாரண உதவிகள் வழங்கல்.

உணவுத் திட்டம்: மகளிர் குழு சார்பில் 14 வாரங்களாகத் தொடர்ந்து மதிய உணவு மற்றும் மாணவர்களுக்குச் சிற்றுண்டி வழங்கல்.

இக்குழுவின் நிறுவனத் தலைவரும் அரசு வழக்கறிஞருமான சக்திவேல், ஒருங்கிணைப்பாளர் ஜமால் முகமது மற்றும் நிர்வாகிகளுக்குப் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.



# திசையன்விளை இடிந்தகரை: புதிய மகளிர் பேருந்து சபாநாயகர் அப்பாவு தொடங்கி வைத்தார்

திசையன்விளை, பிப்.14-

திசையன்விளையில் இருந்து இடிந்தகரைக்கு புதிய மகளிர் நகரப் பேருந்து சேவையை சட்டப்பேரவை சபாநாயகர் எம். அப்பாவு கொடியசைத்து தொடங்கி வைத்தார்.திசையன்விளையில் இருந்து உவரி, நவ்வலடி,கூத்தன்குழி, வழியாக இடிந்தகரைக்கு புதிய மகளிர் நகர பேருந்து விடப்பட்டுள்ளது. பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துனர் க்கு பொன்னாடை போர்த்தி இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் நெல்லை மாவட்ட பஞ்சாயத்து தலைவர் விஎஸ்ஆர். ஜெகதீஷ், ராதாபுரம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் ஜோசப் பெல்சி, தொழில் அதிபர் சேம்பர் கே.செல்வராஜ் ,தங்கையா கணேசன், லயன்ஸ் முன்னாள் கவர்னர் சுயம்புராஜன், மாவட்ட கவுன்சிலர் பாஸ்கர், குமார புரம் ஊராட்சி மன்ற தலைவர் அனிதா பிரின்ஸ்,பெட்டைக் குளம்பொன் இசக்கி, வடிவேல் முருகன், பேரூராட்சி கவுன்சிலர் கண்ணன், திமுக நிர்வாகிகள் ஐஆர்.ரமேஷ், சரவணகுமார் , அன்பழகன், நெல்சன் ராஜா, பொற்கிழி நடராஜன் , சுவிஸ் சாலமோன்,டென்சிங்,

திருநெல்வேலி மண்டல போக்குவரத்து கழக நிர்வாக இயக்குநர்,பொது மேலாளர், வணிக மேலாளர், திசையன்விளை கிளை மேலாளர், திமுக தொழிற் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு மதுரை வடக்கு வட்டத்தில் வாக்குச்சாவடி மையமான சி.இ.ஓ.ஏ. பள்ளியில் முன்னேற்பாடு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# 2026 ஐபிஎல் போட்டிகளை பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் விளையாட கர்நாடக அரசு ஒப்புதல்

பெங்களூரு, பிப்.14-

பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் 2026 ஐ.பி.எல். போட்டிகளை நடத்துவதற்கு கர்நாடக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. கடந்தாண்டு பெங்களூரு மைதானத்தில் நடைபெற்ற ஆர்.சி.பி. அணி வெற்றி விழாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். 11 பேர் உயிரிழந்ததை அடுத்து பெங்களூரு சின்னசாமி மைதானம் பாதுகாப்பற்றதாக அறிவிக்கப்பட்டது.




■ தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்ற பொருநை இலக்கியத் திருவிழாவில் 2026 சாகித்ய அகாடமி விருதாளர் / எழுத்தாளர் சோ.தர்மன் இலக்கியமும், வாழ்வும் என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.ராஜா (சங்கரன்கோவில்) மரு.தி.சதன்திருமலைக்குமார் (வாசுதேவநல்லூர்) ஆகியோர் உள்ளனர்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000